# குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டியவர்கள் கூட்டணியாக வந்துள்ளனர்

## என்டிஏ கூட்டணி குறித்து மு.க.ஸ்டாலின் விமர்சனம்





மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் (இடமிருந்து) மு.பெ.சாமிநாதன் (காங்கயம்), சு.முத்துசாமி (ஈரோடு மேற்கு), தோப்பு வெங்கடாசலம் (பெருந்துறை), என்.நல்லசிவம் (கோபிசெட்டிபாளையம்), பி.எல்.சுந்தரம் (பவானிசாகர்–தனி), சா.செந்தில்நாதன் (மொடக்குறிச்சி), எம்.சிவபாலன் (அந்தியூர்), கே.ஏ.சந்திரசேகர் (பவானி) ஆகியோரை ஆதரித்துப் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

**ஈரோடு, ஏப். 2:** குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டியவர்கள் என்டிஏ என்ற பெயரில் கூட்டணியாக வந்து தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

ஈரோடு அருகே உள்ள திண்டலில் பிரசார பொதுக்கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று ஈரோடு மேற்குத் தொகுதி திமுக வேட்பாளர் சு.முத்துசாமி, மொடக்குறிச்சி தொகுதி மதிமுக வேட்பாளர் சா.செந்தில்நாதன், பெருந்துறை தொகுதி திமுக வேட்பாளர் தோப்பு வெங்கடாசலம், பவானி தொகுதி திமுக வேட்பாளர் கே.ஏ.சந்திரசேகர், அந்தியூர் தொகுதி திமுக வேட்பாளர் எம்.சிவபாலன், கோபிசெட்டிபாளையம் தொகுதி திமுக வேட்பாளர் என்.நல்லசிவம், பவானிசாகர் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பி.எல்.சுந்தரம், திருப்பூர் மாவட்டம், காங்கயம் தொகுதி திமுக வேட்பாளர் மு.பெ.சாமிநாதன், ஈரோடு கிழக்குத் தொகுதிக்கு அறிவிக்கப்பட உள்ள காங்கிரஸ் வேட்பாளர் ஆகியோரை ஆதரித்துப் பேசியதாவது:

கடந்த 5 ஆண்டுகளாக திமுக ஆட்சியில் வேளாண்மை, உள்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம், கல்வி என அனைத்துத் துறைகளிலும் மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம்.

தமிழ்நாடு முழுவதும் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பேருந்து பயணம், தமிழ்ப் புதல்வன் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களால் பயனடையும் பயனாளிகள் வீட்டுக்கு ஒருவராவது நிச்சயம் இருக்கிறார்கள்.

**60 நாள்களில் குற்றப்பத்திரிகை:** ஒரு குற்றம் நடந்தால் எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகளைத் தண்டிக்கிறோம் என்பதில்தான், ஓர் அரசின் செயல்பாடு மதிப்பிடப்படும்.

அப்படிப் பார்த்தால், 86 சதவீதத்துக்கும் மேலான வழக்குகளில் 60 நாள்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது இந்த ஆட்சியில்தான்.

இந்தியாவிலேயே பெண்கள் அதிகமாக வேலைக்குச் செல்வது தமிழ்நாட்டில்தான். இங்கு சட்டம்- ஒழுங்கு சரியாக இருக்கிறது. பெண்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சி எடப்பாடி பழனிசாமிக்கு எரிச்சலைத் தருகிறது. தொடர் தோல்வி காரணமாக பொறாமையில் அவர் பொய்யைப் பரப்புகிறார்.

அதிமுகவின் பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி என்று ஒட்டுமொத்த தமிழ்நாடும் சொல்லியது. ஆனால், அந்த வழக்கையும் முறையாக நடத்தி குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை வாங்கித் தந்து ரூ. 85 லட்சம் இழப்பீட்டையும் தந்தது திமுக ஆட்சி.

ஒரு பெண் காவல் கண்காணிப்பாளருக்கு பாலியல் தொல்லை கொடுத்த டிஜிபியைப் பாதுகாத்தது அன்றைக்கு முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி தானே? அந்தப் பெண் காவல் கண்காணிப்பாளரை வழிமறித்து ஒரு டிஜிபியே மிரட்டியதும் அவரது ஆட்சியில்தானே? இந்த வழக்கில் கூட தண்டனை வாங்கிக் கொடுத்தது நம்முடைய ஆட்சியில்தான்.

**துரோகம் செய்த அதிமுக, பாஜக:** தனது அரசின் சாதனைகள் என்று சொல்ல எடப்பாடி பழனிசாமியிடம் எதுவும் இல்லை. தமிழ்நாட்டுக்கு தேர்தல் நேர சுற்றுலா வரும் பிரதமரிடமும் எதுவும் இல்லை.

ஆனால், நம்மிடம் அவர்களின் துரோகப் பட்டியல் இருக்கிறது. நீட் துரோகம், மெட்ரோ ரயில் திட்டங்களைத் தராமல் துரோகம், நூறு நாள் வேலைத் திட்டத்தை ஒழித்த துரோகம், சிறுபான்மையினருக்கு சி.ஏ.ஏ. துரோகம், மேற்காசியப் போரில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முடங்க வைத்திருக்கும் துரோகம், ஜிஎஸ்டி இழப்பீடு தராத துரோகம் என துரோகங்களின் முழு உருவமாக இருப்பது எடப்பாடி பழனிசாமியும் அவரின் கூட்டாளி பாஜகவும் தான்.

**குற்றவாளிக் கூண்டில் என்டிஏ:** அதிமுக அமைச்சரவைதான் ஊழல்வாதிகள் நிறைந்த அமைச்சரவை என்று அமித் ஷா 2016-இல் சொன்னார். ஆனால், அந்த ஊழல் கூட்டம் மொத்தமும் இப்போது அதே அமித் ஷாவுடன் நிற்கிறது. அவர்களுடன் கூட்டணி வைத்திருப்பவர்களில் ஒருவர் தேர்தல் ஆணையத்துக்கே லஞ்சம் கொடுக்கும் வழக்கில் சிக்கியவர். இன்னொருவர் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி கொடுப்பதில் மாட்டியவர். இப்படி குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டியவர்கள் கூட்டணியாக வந்து, இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். அவர்களை முறியடித்து, தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் நடைபோட மக்கள் ஆதரவு தந்திட வேண்டும் என்றார்.

**கோவையில் பிரசாரம்:** பின்னர், கோவை கொடிசியா மைதானத்தில் வியாழக்கிழமை மாலை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கோவை தெற்குத் தொகுதி திமுக வேட்பாளர் வி.செந்தில் பாலாஜி, கோவை வடக்குத் தொகுதி திமுக வேட்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன், கிணத்துக்கடவு தொகுதி திமுக வேட்பாளர் கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன், வால்பாறை திமுக வேட்பாளர் ஆ.சுதாகர், சூலூர் திமுக வேட்பாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி கொமதேக வேட்பாளர் கே.நித்தியானந்தன், சிங்காநல்லூர் தொகுதிக்கு அறிவிக்கப்பட உள்ள காங்கிரஸ் வேட்பாளர் ஆகியோரை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார்.

## நெல்லையில் இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரசாரம்

**திருநெல்வேலி, ஏப். 2:** திமுக மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து திருநெல்வேலி தெற்கு புறவழிச்சாலையில் வெள்ளிக்கிழமை (ஏப்.3) மாலை 5 மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பிரசாரம் செய்கிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 23-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 30-ஆம் தேதி தொடங்கிய நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் திருநெல்வேலி தெற்கு புறவழிச்சாலையில் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பிரசாரம் செய்கிறார்.

திமுக வேட்பாளர்கள் திருநெல்வேலி தொகுதி சு.சுப்பிரமணியன், பாளையங்கோட்டை தொகுதி மு.அப்துல் வஹாப், ராதாபுரம் தொகுதி மு.அப்பாவு மற்றும் நான்குனேரி, அம்பாசமுத்திரம் தொகுதிகளில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்துப் பேசுகிறார்.

இதற்காக, சென்னையில் இருந்து விமானம் மூலம் வெள்ளிக்கிழமை மாலை 4.50 மணிக்கு தூத்துக்குடி வரும் அவர், அங்கிருந்து நேரடியாக பொதுக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகிறார். பின்னர், கன்னியாகுமரிக்கு புறப்பட்டுச் சென்று இரவில் அங்கு தங்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், சனிக்கிழமை காலை 9 மணிக்கு அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் போட்டியிடும் திமுக, கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்துப் பேசுகிறார்.

## பேரூராட்சி வார்டு உறுப்பினர் கொலை வழக்கு; 4 சிறுவர்கள் உள்பட 6 பேர் கைது

**திருச்சி, ஏப். 2:** திருச்சி அருகே பேரூராட்சி வார்டு உறுப்பினர் கொலை வழக்கில் 4 சிறுவர்கள் உள்பட 6 பேரை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் அருகேயுள்ள பாரதிபுரத்தைச் சேர்ந்தவர் அ. ரஞ்சித்குமார் (38). கூத்தைப்பார் பேரூராட்சி 11-ஆவது வார்டு உறுப்பினரான இவர், திருவெறும்பூர் அரசு ஐடிஐ எதிரே டாஸ்மாக் மதுக் கூடமும் நடத்தி வந்தார்.

இந்நிலையில், கடந்த திங்கள்கிழமை இரவு திருவெறும்பூரில் இருந்து நவல்பட்டு செல்லும் சாலையில் புதுத்தெரு அருகே அவர் கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

இதுதொடர்பாக நவல்பட்டு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வந்தனர்.

ஏஎஸ்பி அரவிந்த் பனாவத் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.

இந்நிலையில், பேரூராட்சி வார்டு உறுப்பினரை கொலை செய்தது நவல்பட்டு புதுத்தெருவைச் சேர்ந்த கென்னடி மகன் கிரி (எ) புவனேஷ் (20), காட்டூர் கணேஷ் நகரைச் சேர்ந்த மகேந்திரன் மகன் மதன் (25) மற்றும் 4 சிறுவர்கள் என்பது தெரியவந்தது.

இதையடுத்து, மேற்கண்ட 6 பேரையும் தனிப்படையுடன் இணைந்து நவல்பட்டு போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர். இதைத் தொடர்ந்து 6 பேரையும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 3-இல் போலீஸார் ஆஜர்படுத்தினர். பின்னர், சிறுவர்களை கூர்நோக்கு இல்லத்திலும், மற்ற இருவரை சிறையிலும் அடைத்தனர்.

மதுக் கூடத்தில் மாமூல் வழங்குவதில் பாட்டில்மணி என்பவருக்கும், ரஞ்சித்குமாருக்கும் ஏற்பட்ட முன்விரோதத்தில் ரஞ்சித்குமார் கொலை செய்யப்பட்டது போலீஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## முதல்வர் பொதுக் கூட்டத்துக்கு வந்த திமுக தொண்டர் மாரடைப்பால் உயிரிழப்பு

**ஈரோடு, ஏப். 2:** ஈரோட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பொதுக் கூட்டத்துக்கு வந்த திமுக தொண்டர் மாரடைப்பால் உயிரிழந்தார்.

ஈரோடு வீரப்பன்சத்திரம் காமராஜர் வீதியைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன் (64). திமுக 23 ஆவது வட்ட பிரதிநிதியாக இருந்தார். அவர் ஈரோடு திண்டல் அருகே வியாழக்கிழமை காலை நடைபெற்ற திமுக பிரசார கூட்டத்துக்காக வந்தார். கூட்டத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் முன்னரே, காலை 9 மணி அளவில் ரவிச்சந்திரன் மைதானத்துக்குள் வந்து முன்பகுதிக்கு நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது மைதானத்தில் பொதுமக்கள் வருகை குறைவாகவே இருந்தது. நடந்து சென்றுகொண்டிருந்த அவர் திடீரென்று மயங்கி விழுந்தார்.

இதைக் கண்ட திமுக நிர்வாகிகள், கட்சியினர் விரைந்து சென்று அவரை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்தபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டது தெரியவந்தது. மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து ஈரோடு தாலுகா போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பிளஸ் 2 மாணவி கொல்லப்பட்ட வழக்கு: குடும்பத்துக்கு மேலும் ரூ.10 லட்சம் வழங்க உத்தரவு



**மதுரை, ஏப். 2:** தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் அருகே பிளஸ் 2 மாணவி கொல்லப்பட்ட விவகாரத்தில், அவரது குடும்பத்துக்கு மேலும் ரூ. 10 லட்சம் வழங்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வியாழக்கிழமை உத்தரவிட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த வழக்குரைஞர் மாரீஸ்வரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

விளாத்திகுளம் அருகேயுள்ள குளத்தூர் பகுதியில் கடந்த மாதம் 10-ஆம் தேதி மாலை இயற்கை உபாதை கழிப்பதற்காக வெளியே சென்ற பிளஸ் 2 மாணவி, பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். இதுதொடர்பாக புகார் அளித்தும் விளாத்திக்குளம் போலீஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், அங்கு பணியிலிருந்த பெண் காவலர் மாணவியின் பெற்றோரை இழிவுபடுத்தும் வகையில் பேசினார்.

இந்த நிலையில், காவல் துறையினர் இந்த வழக்கை விசாரித்தால் விசாரணை சரியான முறையில் இருக்காது. எனவே, வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும். சிறப்பு விசாரணை குழுவை அமைத்து நீதிமன்றக் கண்காணிப்பின் கீழ் விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும். பாதிக்கப்பட்ட பிளஸ் 2 மாணவியின் குடும்பத்துக்கு ரூ. 50 லட்சம் அரசு இழப்பீடாக வழங்க உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார். இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் என். சதீஷ் குமார், எம். ஜோதிராமன் அமர்வு முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது,உயிரிழந்தமாணவியின் பெற்றோர் முன்னிலையாகி, இந்த வழக்கில் தங்களையும் இணைக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். அரசுத் தரப்பில் குறுக்கிட்ட வழக்குரைர்கள், மாணவியின் குடும்பத்துக்கு இடைக்கால நிவாரணமாக ரூ. 5 லட்சம் வழங்கப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும். விசாரணை நீதிமன்றத்தில் விசாரணை நடத்த அரசுத் தரப்பில் சிறப்பு வழக்குரைஞர் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

**நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:** உயிரிழந்த மாணவியின் குடும்பத்துக்கு ஏற்கெனவே அரசு சார்பில் ரூ. 5 லட்சம் வழங்கப்பட்டது. மாணவியின் குடும்பத்துக்கு மேலும் ரூ. 10 லட்சம் வழங்க வேண்டும். வழக்கு விசாரணையை நடத்த அரசுத் தரப்பில் குற்றவியல் பிரிவில் மூத்த வழக்குஞரை நியமிக்க உத்தரவிடப்படுகிறது. வழக்கு விசாரணை சரியான முறையில் செல்கிறது. எனவே, மாணவியின் பெற்றோரை இந்த வழக்கில் மனுதாரராகச் சேர்க்க வேண்டியதில்லை. இந்த வழக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

## தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஏப்ரல் 4 வரை மழைக்கு வாய்ப்பு

**சென்னை, ஏப். 2:** தென் தமிழக கடலோர மாவட்டங்களில் வெள்ளி, சனி (ஏப். 3, 4) இடி, மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

உள் தமிழக மாவட்டங்களிலிருந்து மத்திய கொங்கன் வரை உள் கர்நாடகம் வழியாக காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுவதால், தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெள்ளி, சனி (ஏப். 3, 4) ஆகிய இரு நாள்களும் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் ஞாயிறு, திங்கள் (ஏப். 5, 6) இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் ஏப். 7-ஆம் தேதி மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் ஏப். 8-ஆம் தேதி மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், வெள்ளிக்கிழமை வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெப்ப நிலை:** தமிழகத்தில் வியாழக்கிழமை அதிகபட்சமாக பரமத்தி வேலூரில் 100.7 ஃபாரன்ஹீட் வெப்ப நிலை பதிவானது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஏப். 6-ஆம் தேதி வரை அதிகபட்ச வெப்ப நிலை, சற்று அதிகமாக இருக்கக்கூடும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சட்டப்பேரவைத் தேர்தல்

## 234 தொகுதிகளின் அஞ்சல் வாக்குகளை பிரித்து வழங்க திருச்சியில் சிறப்பு மையம்

**திருச்சி, ஏப். 2:** தமிழகம் முழுவதும் உள்ள 234 தொகுதிகளுக்கான அஞ்சல் வாக்குகளைப் பிரித்து வழங்கிடும் வகையில் திருச்சியில் சிறப்பு மையம் தயார்படுத்தப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, மாநிலம் முழுவதும் அஞ்சல் வாக்குகள் வழங்கப்பட்டு, தேர்தல் பணியாற்றும் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பதிவு செய்யப்பட்ட அஞ்சல் வாக்குகளை உரிய சட்டப்பேரவைத் தொகுதிக்கு அனுப்புவதில் உள்ள சிரமங்களை கருத்தில்கொண்டு, தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தேர்தல் அலுவலர்களால் பெறப்பட்ட அஞ்சல் வாக்குகள் தொடர்பான படிவம் - 12 தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு பிரித்து வழங்க பொதுவான சிறப்பு மையமாக திருச்சி மாவட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைய உத்தரவின்படி, திருச்சி மாவட்டத்தில் அஞ்சல் வாக்குகள் தொடர்பான படிவம் - 12-ஐ பிரித்து வழங்க மாவட்ட நிர்வாகம் சார்பில், பொதுவான சிறப்பு மையம், மத்தியப் பேருந்து நிலையம் அருகில் உள்ள கலையரங்கம் மஹாலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மையத்தில் அஞ்சல் வாக்குகளைப் பிரித்து வழங்கும் பணியை கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் அ.சிவஞானம் வியாழக்கிழமை தொடங்கிவைத்தார்.

திருச்சி மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான வே. சரவணன் முன்னிலையில் பணிகள் நடைபெற்றன.

மாநிலம்முழுவதும்உள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்களால் நியமனம் செய்யப்பட்ட பொறுப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் உள்ள 38 மாவட்டங்களுக்கான அஞ்சல் வாக்குகள் தொடர்பான படிவம் - 12, சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் நியமனம் செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்களால் பிரித்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அனைத்து மாவட்டத்திலிருந்தும் அஞ்சல் வாக்குகளை கவனிக்கும் தொடர்பு அலுவலர்கள், உதவியாளர்கள் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.


**பெயர் மாற்றம்**

LAKSHNA RAJENDRAN
எண்.220, சக்தி நகர்,
தென்குத்து, வானதிராயபுரம்,
குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர்
மாவட்டம், தமிழ்நாடு – 607303,
என்ற முகவரியில் வசிக்கும்
நான், இனி
LAKSHANA RAJENDRAN
என்று அழைக்கப்படுவேன்.
- LAKSHNA RAJENDRAN

**ஹீரோ ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்**

**திருத்தம்**

நாள்: 03.04.2026

ஞாயிறுதோறும் தினமணியுடன்... கொண்டாட்டம்


Format C- 1

**DECLARATION ABOUT CRIMINAL CASES**

Name and address of Candidate : **B.RAVICOUMAR**,
No. 17 C, Thiru- Vi- Ka Street, Thillai Nagar,
Villianur, Puducherry 605110

Name of Political Party : **All India NR Congress**

Name of Election : **Puducherry Legislative Assembly Election - 2026**

*Name of Constituency : 05-Villianur

I, **B.Ravicoumar**, a candidate for the above-mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

**(A) Pending Criminal Cases**

| Sl. No | Name of Court | Case No. and dated | Status of cases | Section of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1. | Special judge under (Prevention of corruption Act) Puducherry | RC 0322024A0014 ACB Chennai Dated 08-10-2024 | Taken on file as special CC 2/2025 and pending | u/s 109 IPC r/w section 13(2), 13 (1) (e) of prevention of corruption Act 1988 and section 13(2) r/w section 13(1) (b) of Prevention of corruption Act1988 as amended Disproportionate of assets and abetment |

**(B) Details about cases of conviction for criminal offences**

| Sl. No | Name of Court and Date(s) of order(s) | Description of offence(s) and Punishment imposed | Maximum Punishment imposed |
|---|---|---|---|
| 1. | Judicial Magistrate I Puducherry STR 935/2005 | u/s 279, 338, IPC Traffic violation Fine of Rs. 2000/- Imposed on 30-05-2005 | Fine of Rs. 2000/- |
| | Not Applicable | Not Applicable | Not Applicable |

B.RAVICOUMAR


**UJJIVAN SMALL FINANCE BANK**

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்களா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.23, தரைத்தளம் & முதல் தளம், வார்டு எண்.3, ஹாஸ்பிட்டல் ரோடு, காந்தி நகர், மயிலாடுதுறை, தமிழ்நாடு-609001

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு**

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | கடன் நிலுவைத் தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித் தொகை (EMD) |
|---|---|---|---|---|
| 1642210090000006 / 1.M/s.பாலாஜி டென்டல் கிளினிக் 2.Mr.K.பாலாஜி, 3.Mr.M.கலியபெருமாள் | (i) 07.09.2022 & 01.09.2022 அன்றுள்ளபடி ₹ 30,16,786/- (ரூபாய் முப்பது லட்சத்து பதினாறாயிரத்து எழுநூற்று எண்பத்தாறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.02.2023 & நேரடி சுவாதீனம் - 23.08.2025 | 23.03.2026 அன்றுள்ளபடி ₹ 56,83,371.71 (ரூபாய் ஐம்பத்து ஆறு லட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து முன்னூற்று எழுபத்து ஒன்று மற்றும் பைசா எழுபத்து ஒன்று மட்டும்) | ₹ 32,73,000/- (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சத்து எழுபத்து மூன்றாயிரம் மட்டும்) | ₹ 3,27,300/- (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்து ஏழாயிரத்து முன்னூறு மட்டும்) |

**சொத்து விவரம்:** புதுச்சேரி பதிவு மாவட்டம் மற்றும் காரைக்கால் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பட்டா எண்.486(N), பழைய சர்வே எண்.1041 பகுதி, மறு சர்வே எண்.104/69 (புதிய சப் டிவிஷன் மறு சர்வே எண்.104/69/A/1/A/4, 13, கொட்டுச்சேரி கிராமம், மனை எண்.10, புது தெரு, புது நகர், மங்களா நகர், கொட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து என்னும் முகவரியில் தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 20.80 மீட்டர், மேற்கு பக்கம் 17.40 மீட்டர், கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 11.00 மீட்டர், தெற்கு பக்கம் 11.80 மீட்டர், ஆக மொத்தம் 218 சதுர மீட்டர் அல்லது 2346 சதுர அடி நிலம் மற்றும் RCC கூரைப்போட்ட கட்டிடம். எல்லைகள்: 6.10 மீட்டர் பொது வழிப்பாதைக்கு தெற்கு, மனை எண்.11-க்கு மேற்கு, R.S.எண்.104/70-ல் உள்ள சொத்துக்கு வடக்கு, மனை எண்.9-க்கு கிழக்கு. **மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது Mr.K.பாலாஜி, S/o.M.கலியபெருமாள்-க்கு சொந்தமானது (உங்களில் எண்.2-ல் உள்ள நபர்).**

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 22.04.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை**

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 21.04.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 20.04.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.S.ஞானவேல் - 98410 17131 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

ஒப்பம்/-
தேதி: 03.04.2026, இடம்: பெங்களூரு — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்